Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C. 173/2025** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosection | – **PW 9** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | **வசந்தன்** |
| Father/Husband Name | : | செல்வ ஸ்டாலின் |
| Village | : | அக்காள்மடம், பாம்பன் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | ஆட்டோ ஓட்டுநர் |
| Religion | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2025

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தாலுகா பாம்பன் அக்காள்மடத்தில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 இளவேனில் சில்பா , இறந்தவரின் மனைவியை தெரியும். இறந்து போன ஜோசப் கென்னடியை தெரியும். கடந்த 10.01.2025 ம் தேதி நான் அதிகாலை ஆட்டோவை எடுத்துக்கொண்டு இராமேஸ்வரம் சவாரி செல்வதற்காக சென்றேன். அப்போது அக்காள் மடம் பஸ் ஸ்டாப்பில் என் அண்ணன் மகன் ஜோஸ்வா அங்கு இருந்தார். அப்போது அங்கு பாம்பன் காவல் நிலைய ஆய்வாளர், அந்த இடத்தை விசாரித்து கையெழுத்து கேட்டார்கள்.

பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்து **அ.சா.ஆ.4** போலீசார் என்னை விசாரித்தார்கள். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அத்தாட்சியில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.5.**

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

கடந்த 10.01.2025 ம் தேதி அதிகாலை 3 மணியளவில் பாம்பன் அக்காள் மடம் வடகரையை சேர்ந்த சத்யா மகன் ஜோஸ்வா என்பவரும் அக்காள் மடம் பஸ் ஸ்டாப் அருகே பேசி கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அங்கு வந்த பாம்பன் காவல் நிலைய ஆய்வாளர் என் முன்பாக வரைபடம் வரைந்து மகஜர் தயார் செய்தார் என்றால் அதில் கையெழுத்து மட்டும் போட்டேன். அவ்விடத்தில் ஒரு சின்ன கத்தி, இரத்தம் பட்ட மற்றும் படாத மண்ணை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார் என்றும் அந்த அத்தாட்சியில் நானும் ஜோஸ்வாவும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனக்கு சித்தப்பா முறை என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி முதல் விசாரணையில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 173/2025** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW 8** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | **ஜோஸ்வா** |
| Father/Husband Name | : | சத்யா |
| Village | : | அக்காள்மடம், பாம்பன் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | மீன் பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2025

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தாலுகா பாம்பன் அக்காள்மடத்தில் வசித்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 இளவேனில் சில்பா , இறந்தவரின் மனைவியை தெரியும். இறந்து போன ஜோசப் கென்னடியை தெரியும். கடந்த 10.01.2025ம் தேதி அதிகாலை நான் கடலுக்கு செல்வதற்காக அக்காள் மடம் பஸ் ஸ்டாப்பிற்கு சென்றோம். அங்கு என் சித்தப்பா வசந்தும் இருந்தார். நாங்கள் அங்கு பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு பாம்பன் காவல் நிலைய ஆய்வாளர், அந்த இடத்தை விசாரித்து கையெழுத்து கேட்டார்கள்.

பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜரில் நானும் வசந்த் –ம் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து **அ.சா.ஆ.2.** போலீசார் என்னை விசாரித்தார்கள். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.3.**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 173/2025** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW 7** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | **இமானுவேல்** |
| Father/Husband Name | : | தேவசகாயராஜ் |
| Village | : | அக்காள்மடம், பாம்பன் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | மீன் பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2025

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தாலுகா பாம்பன் அக்காள்மடத்தில் வசித்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 இளவேனில் சில்பா வை தெரியும். இறந்து போன ஜோசப் கென்னடியை தெரியும். அ.சா.1 இளவேனில் சில்பா எதிரி மீது புகார் கொடுத்தது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தபோது எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். ஜோசப் கென்னடி எப்படி இறந்தார், எங்கு எந்த தேதியில் எத்தனை மணிக்கு யாரால் தாக்கப்பட்டு இறந்தார் என்றால் தெரியாது. நான் கடல்தொழிலுக்கு

சென்று விட்டேன்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

கடந்த 09.01.2025ம் தேதி சாட்சி தேவ பெனட்டின் என்பவரின் அம்மாவின் முதல் வருட இறப்பு நிகழ்வு நடந்தது என்றால் சரிதான். அந்த விழாவிற்கு என்னை அழைத்தார்கள் நான் கடல் தொழிலுக்கு சென்றுவிட்டதால் செல்லவில்லை, என் மனைவி சென்றிருந்தார். நான் தான் அந்த நிகழ்விற்கு சென்றிருந்தேன் என்றும் நினைவு நாள் நிகழ்ச்சியில் எதிரிக்கும் இறந்துபோன ஜோசப் கென்னடிக்கும் தகராறு ஏற்பட்டு அங்கு வந்திருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அக்காள்மடத்தில் பஸ் நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த பஸ் நிறுத்தத்தில் இரவு 8 மணியளவில் நான் அங்கு இருந்தேன். என்னுடன் கென்னடி, சீமோன், எபிராஜ், அகஸ்டஸ் ஆகியோர்கள் வழக்கம் போல் அங்கிருந்த கல் பெஞ்ச்–ல் உட்கார்ந்திருந்தார்கள் என்றால் நான் அன்றைய தினம் கடலுக்கு சென்று விட்டேன். அந்த நேரத்தில எதிரி கென்னடியின் முதுகில் காலால் எட்டி உதைத்தார் என்றும் கென்னடி கீழே விழுந்துவிட்டார் என்றும் பின் எழுந்த கென்னடி இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து எதிரியின் நெற்றி இடது பக்க காதில் கீறி விட்டார் என்றும் அதனால் எதிரி கெட்ட வார்த்தையால் திட்டி பையில் மறைத்து வைத்திருந்த அரிவாளால் கென்னடியின் வலது பக்க அக்குள் அருகில் வெட்டி சதை கிழிந்து கென்னடி கீழே விழுந்துவிட்டார் என்றும் கீழே விழுந்தவுடன் நான், எபிராஜ், அகஸ்டஸ் சேர்ந்து சண்டையை விலக்கிவிட்டோம் என்றும் அதன் பின்பு எதிரி அங்கிருந்து சென்று விட்டார். பின்பு அங்கிருந்த சீமோன் கென்னடியின் வீட்டிற்கு தகவல் சொல்லி மனைவி மற்றும் மகள் சம்பவ இடத்திற்கு வந்து காயம்பட்டு கிடந்த கென்னடியை சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் மருத்துவமனையில் கென்னடி இறந்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. கென்னடி இறந்துவிட்டார் என கேள்விப்பட்டேன். கென்னடி எப்படி இறந்தார் என்றால் எனது அம்மா விஜயா என்பவர் என்னிடம் சொன்னார். எதிரிக்கும் ஜோசப் கென்னடிக்கும் அக்காள் மடம் பஸ் ஸ்டாப்பில் சண்டை ஏற்பட்டதாகவும் அதில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்

என கேள்விப்பட்டேன். எதிரியும் நானும் கடலுக்கு மீன்பிடிக்க ஒன்றாக செல்வோம் என்றால் சரிதான். எதிரி எனக்கு மாமா முறை வேண்டும். உண்மையில் நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்றும் எதிரி எனக்கு மாமா என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.